# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குழித்துறை நகராட்சி

<u>குழித்துறை நகர் மன்றத்தின் 10–07–2018–ம் செவ்வாய்கிழமை நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்</u>

<u>பொருள் எண். 1</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.12981/2018/இ3, நாள் 27–06–2018–ன்படி இந்நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு கோரி பெறப்பட்ட பிரேரணையினை பரிசீலித்து ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2018–2019–ன்கீழ் சாலை பணிகள் செய்ய கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/ மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 1.00 | 0.38 | 0.30 | 0.22 | 0.10 |

மேற்படி திட்டத்தின்கீழ் கீழ்காணும் பணியினை செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

| Sl. No. | Name of the Work | Estimate Amount Rs. in lakhs |
|---|---|---|
| 1 | Improvement of road works at Thettrivilai Near Devikumari College road, Chappathu road (Near Sasthakovil to Kurusadi) Kannacode Krishnankovil road and Koothamanvilai Road in Ward No.10, 11 & 12 in Kuzhithurai Municipality | 1.00 |

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3151**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 93–வது வாவுபலி பொருட்காட்சியில் 5–வது முறையாக மறு ஏலம் / மறுஒப்பந்தப்புள்ளி 10–07–2018 அன்று நடைபெற்றது. அதன் விபரம் கீழ்வருமாறு உள்ளது. மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எ ண் | இனம் | 2015–16ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | 2016–17ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | 2017–18ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | தற்போதைய ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி | | | இந்த ஆண்டின் அதிக தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெயர் | ஏலத் தொகை ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூபாய் | |
| 1 | பக்கக் காட்சி அமைத்தல் | 4505000 | 3300300 | 5001300 | சி. மனாஸ் | | 31,66,500 | |
| 2 | ஐஸ் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனை உரிமம் | 613000 | 700000 | 614500 | சி. மனாஸ் | | 3,10,000 | |
| 3 | தபால் நிலையம் முன்உள்ள காலியிடத்தில் சிற்றுண்டி அமைத்தல் | – | 11750 | - | மாதவன் | | 10,000 | |
| 4 | பொருட்காட்சி திடல் கடை எண்.15 | 43250 | 52175 | 53010 | ஸ்ரீகுமார் | | 53250 | |
| 5 | வேலுத்தம்பி திடல் பக்கம் உள்ள கடை எண். 8 | 7860 | 7900 | | அஹமது | | 8,500 | |
| 6 | வேலுத்தம்பி திடல் பக்கம் உள்ள கடை எண். 9 | 5750 | 5800 | 5900 | அஹமது | | 6,500 | |

வரிசை எண்.1, 2, 3 ஆகிய இனங்களுக்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது கடந்த வருட தொகையினை விட குறைவாகவும், மூன்று வருட சராசரி தொகையினை விட குறைவாக உள்ளதால் மன்றத்தின் முடிவிற்கு.
வரிசை எண்.4, 5, 6 ஆகிய இனங்களுக்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது கடந்த வருட தொகையினை விட கூடுதலாக உள்ளதால் உரிமம் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண். 3152**

**வரிசை எண்.4, 5, 6 இனங்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி கடந்த வருட தொகையை விட கூடுதலாக உள்ளது. உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கப்படுகிறது. வரிசை எண்.1, 2, 3–க்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை மிக குறைவாக உள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சி அலுவலக நுழைவாயில், சேவை மையம், ஆணையாளர் அறையின் முன்பகுதி வராண்டா பகுதி, அலுவலகத்தின் பின்பகுதி, சுகாதார அலுவலர் அறையின் முன் பகுதி, பொறியாளர் அறையின் முன்பகுதி வராண்டா ஆகிய இடங்களில் CCTV கேமரா பொருத்துவதற்கு ரூ.3.00 லட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3153**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 4

93–வது வாவுபலி பொருட்காட்சியை முன்னிட்டு மின்வசதி செய்யும் பணி ரூ.95,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள 29–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | அம்மா சவுண்ட்ஸ் | 0.00 |
| 2 | சுவாமி சவுண்ட்ஸ் | 0.11% குறைவு |
| 3 | திரு.பி. ஜெயச்சந்திரன் | 57.89% குறைவு |
| 4 | திரு.எஸ். பாபு | 42.11% குறைவு |

அ.கு.:– வரிசை எண்.1–ல் கொடுக்கப்பட்டுள்ள தொகையில் பணி செய்ய சாத்தியமில்லாததால், மீதமுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.3–ல் திரு.P. ஜெயச்சந்திரன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3154**
**குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சி 93–வது வாவுபலியை முன்னிட்டு நிழற்படம் எடுத்து ஆல்பம் தயார் செய்யும் பணிக்கு 29–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி. விஜயன்,<br>விஜி ஸ்டுடியோ | 0.33% குறைவு |
| 2 | திரு.சி. இயேசுதாசன்<br>தாஸ் ஸ்டுடியோ | 0.67% குறைவு |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் திரு.சி. இயேசுதாசன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3155**
**குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சி 93–வது வாவுபலி பொருட்காட்சியை முன்னிட்டு மைதானத்தை Hitachi இயந்திரம் வைத்து சமதளமாக்கி கடல் மணல் நிரப்பும் பணி ரூ.60,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள 29–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.டி. ஜஸ்டின்குமார் | 0.08% குறைவு |
| 2 | திரு.சி. சுரேஷ் | மதிப்பீட்டு விகிதம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரால் கொடுக்கப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3156**

**குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 7

குழித்துறை நகராட்சி 93–வது வாவுபலி பொருட்காட்சியை முன்னிட்டு பேனர் மற்றும் தட்டி போர்டு (Flex) அமைக்கும் பணி ரூ.13,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள 29–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி. சுரேஷ் | 0.38% குறைவு |
| 2 | திரு.ஆர். சுரேஷ்ராஜ் | மதிப்பீட்டு விகிதம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் திரு.சி. சுரேஷ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3157**

**குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 8

93–வது வாவுபலி பொருட்காட்சியை முன்னிட்டு ரகசிய கேமிரா அமைக்கும் பணி ரூ.65,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள 29–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.A. ஆன்றணி, பாகோடு | 0.77% குறைவு |
| 2 | திரு.P. ஜெயச்சந்திரன் | 1.54% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் திரு. A. ஆன்றணி என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3158**

**குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட அரசு சாராத கல்விநிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பு திருத்தம் செய்வது தொடர்பாக பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேபணைகள் எதுவும் பெறப்படாத நிலையில் இறுதி செய்யப்பட்ட சொத்து வரிவிதிப்பு தொடர்பான சட்டத்திருத்தங்கள் மாவட்ட அரசிதழில் வெளியிட இரண்டு பக்கங்களுக்கு தலா ரூ.2100/– வீதம் ரூ.4200/–க்கு கருவூல செல்லான் மூலம் வழங்கிட தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் மேற்கண்ட ரூ.4200/–க்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3159**
**மன்றம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 10

93–வது வாவுபலி பொருட்காட்சியை முன்னிட்டு நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளில் 73 ஸ்டால் கட்டும் பணி ரூ.3.25 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 10–7–2018 அன்று கோரப்பட்ட மறு ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் .

| வ. எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்தவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர். சுரேஷ்ராஜ் | 24.62% குறைவு |
| 2 | திரு.எஸ். ஜீன்ஸ் | 62.46% குறைவு |
| 3 | திரு.எஸ். பாபு | 49.85% குறைவு |
| 4 | திரு.பி. ஜெயப்பிரகாஷ் | 48.00% குறைவு |
| 5 | திரு.பி. ஜெயச்சந்திரன் | 57.54% குறைவு |
| 6 | திரு.பி. தேவராஜன் | 54.77% குறைவு |

அ.கு,:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் திரு.எஸ். ஜீன்ஸ் என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3160**
**மன்றம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 11

93–வது வாவுபலி பொருட்காட்சியை முன்னிட்டு வாகனம் மூலம் விளம்பரம் செய்யும் பணி ரூ.50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள 10–07–2018 அன்று கோரப்பட்ட மறு ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்தவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எஸ். பாபு | 1% குறைவு |
| 2 | திரு.சி. சுரேஷ் | மதிப்பீட்டு விகிதம் |

அ.கு,:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் திரு.எஸ். பாபு என்பவரால் கொடுக்கப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3161**
**குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தையினுள் அமைந்துள்ள வாழைக்குலை உறைபோடும் கட்டிடத்தின் சுவர்கள் மற்றும் மேற்கூரை மிகவும் பழுதடைந்துள்ளது. மழைக்காலங்களில் மேற்கூரை வழியாக மழைநீர் கட்டிடத்திற்குள் செல்வதால் சுவர்கள் இடிந்து விழும் அபாய நிலையிலுள்ளது. எனவே பாதுகாப்பற்ற நிலையிலுள்ள கட்டிடத்தை இடித்து மாற்றி புதிதாக வாழைக்குலை உறைபோடும் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.7,00,000/–ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு,:– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3162**
**மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/–
எம். கணபதி சங்கர்,
ஆணையர்(பொ.) மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்(பொ.),
குழித்துறை நகராட்சி.

## குழித்துறை நகர் மன்றத்தின் 13–07–2018–ம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற அவசர கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 93–வது வாவுபலி பொருட்காட்சியில் 6–வது முறையாக மறுஏலம் / மறுஒப்பந்தப்புள்ளி 13–07–2018 அன்று நடைபெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு.

| வ. எண் | இனம் | 2015–16ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | 2016–17ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | 2017–18ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | தற்போதைய ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி | | | இந்த ஆண்டின் அதிக தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெயர் | ஏலத் தொகை ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூபாய் | |
| 1 | பக்கக் காட்சி அமைத்தல் | 4505000 | 3300300 | 5001300 | சி. மனாஸ்<br>அருள்ராஜ் | | 32,00,000<br>35,10,000 | |
| 2 | ஜஸ் மற்றும் ஜஸ்கிரீம் விற்பனை உரிமம் | 613000 | 700000 | 614500 | சி. மனாஸ்<br>டி. விஜயகுமார் | | 2,32,000<br>5,00,000 | |
| 3 | உணவு விடுதி அமைத்து நடத்தும் உரிமம் | 68000 | 70000 | 79500 | டி. விஜயகுமார் | | 50,000 | |
| 4 | தபால் நிலையம் முன்உள்ள காலியிடத்தில் சிற்றுண்டி அமைத்தல் | – | 11750 | - | ஆர். மாதவன் | | 11,800 | |
| 4 | பொருட்காட்சி திடல் கடை எண். 8 | 34034 | 34151 | 34250 | சவாத் | | 34,300 | |
| 6 | பொருட்காட்சி திடல் கடை எண். 9 | 46046 | 46146 | 47500 | சவாத் | | 47,550 | |
| 7 | பொருட்காட்சி திடல் கடை எண்.10 | 41111 | 41151 | 42500 | சிறாஜீதின் | | 42,550 | |
| 8 | பொருட்காட்சி திடல் கடை எண்.11 | 37750 | 41225 | 41111 | சிறாஜீதின் | | 41,200 | |
| 9 | பொருட்காட்சி திடல் கடை எண்.12 | 35600 | 35500 | 40010 | சந்தேஷ் | | 40,150 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | பொருட்காட்சி திடல் கடை எண்.13 | 30000 | 29000 | 30200 | சந்தேஷ் | | 30,250 | |
| 11 | பொருட்காட்சி திடல் கடை எண்.14 | 32000 | 33111 | 36100 | சுரேஷ்குமார் | | 36,150 | |
| 12 | பொருட்காட்சி திடல் கடை எண்.20 | 51000 | | 52300 | சுரேஷ்குமார் | | 52,350 | |
| 13 | பொருட்காட்சி திடல் கடை எண்.21 | – | | 45100 | எஸ். பிரசாத் | | 45,150 | |
| 14 | பொருட்காட்சி திடல் கடை எண்.22 | – | | 56100 | எஸ். பிரசாத் | | 56,150 | |
| 15 | பொருட்காட்சி திடல் கடை எண்.23 | – | | 43500 | பி.எஸ். நிஷாத் | | 45,550 | |

வரிசை எண்.1, 2, 3 ஆகிய இனங்களில் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது கடந்த வருட குத்தகை தொகையினை விட மிக குறைவாகவும், மூன்ற வருட சராசரி தொகையினை விட குறைவாக இருப்பதாலும் இது 6–வது முறையாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆகையாலும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

வரிசை எண்.4 முதல் 15 வரையுள்ள இனங்களுக்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது கடந்த வருட குத்தகை தொகையினை விட கூடுதலாக இருப்பதாலும் உரிமம் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண். 3163**

**வரிசை எண்.1–க்கு 93–வது வாவுபலி பக்கக்காட்சிக்காக ஏலம் / டெண்டர் அறிவிப்புகள் தினசரி நாளிதழ் ( மக்கள் தொடர்பு அலுவலர் வழியாக) 6 முறை விளம்பரம் செய்து கடைசியாக 6–வது முறையாக 10–07–2018 ஒரு நபர் ஒப்பந்தப்புள்ளி மூலம் வரிகள் உட்பட ரூ.38,00,000/– லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மேற்படி தொகையானது கடந்த ஆண்டு தொகை மற்றும் மூன்று வருட சராசரி தொகையினை விட மிக குறைவாக உள்ளதாலும் குறுகிய கால ஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி 13–07–2018 அன்று கோரப்பட்டது. அதில் திரு. மனாஸ் என்பவர் ரூ.32,00,000/– லட்சம் தொகைக்கும் திரு. அருள்ராஜ் என்பவர் ரூ.35,10,000/–க்கும் டெண்டர் கொடுத்துள்ளார். இத்தொகை கடந்த ஆண்டு தொகை மற்றும் மூன்று ஆண்டு சராசரி தொகையினை விடவும் குறைவாக உள்ளது. எனினும் வாவுபலி பொருட்காட்சி 27–07–2018 அன்று ஆரம்பிக்கப்பட உள்ளதாலும், மீண்டும் மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர போதிய காலஅவகாசம் இல்லாததாலும் தற்பொழுது மேம்பாலப்பணிகள் நடைபெறுவதால் போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் வாவுபலி பொருட்காட்சியினை கண்டுகளிக்க இயலாத சூழ்நிலை உள்ளதாலும் துறை மூலம் பக்கக்காட்சிகள் நடத்த வழிவகை இல்லாததாலும் நகராட்சி நிதியிழப்பு ஏற்படாத வண்ணம் வாவுபலி வசூலினை கருத்தில் கொண்டு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அருள்ராஜ் என்பவரின் குத்தகை தொகையினை ரூ.35,10,000/–க்கு மற்றும் வரிகள் உட்பட ரூ.42,12,000/–க்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**மேலும் வரிசை எண்.2–க்கு உரிமம் வழங்கலாம். வரிசை எண். 4 முதல் 15 வரை உள்ள இனங்களக்கு கூடுதல் தொகை கொடுத்துள்ளதால் உரிமம் வழங்கலாம். மேலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர காலஅவகாசம் இயலாததால் குத்தகை போகாத இனங்களுக்கு உரிய**

**விண்ணப்பம் பெற்று மனுதாரர் கோரும் உயர்ந்த தொகைக்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 2

93–வது வாவுபலி பொருட்காட்சியினை முன்னிட்டு குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தேவையான தளவாட சாமான்கள் வினியோகம் செய்ய **13–07–2018–ல்** விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்வருமாறு.

| Sl. No. | Item | | Pramiska Trading Vadasery, Nagercoil | Shangha Chemiculs | Sai sunmuka Dyes |
|---|---|---|---|---|---|
| 1 | பிளிச்சிங் பவுடர் | 1 கிலோ | 39 | 40 | 41 |
| 2 | சுண்ணாம்பு | 1 கிலோ | 10 | 11 | 12 |
| 3 | பினாயில் | 1 கிலோ | 70 | 71 | 72 |
| 4 | மண்வெட்டி | 1–க்கு | 600 | 601 | 603 |
| 5 | கடப்பறை | 1–க்கு | 1700 | 1701 | 1705 |
| 6 | ரப்பர்குட்டை | 1–க்கு | 400 | 401 | 402 |
| 7 | 10’ வாளி | ரூபாய் | 400 | 401 | 402 |
| 8 | ரோல் கயிறு | 1 ரோல் | 2000 | 2001 | 2005 |
| 9 | பிளாஸ்டிக்மக் | 1 | 20 | 21 | 25 |
| 10 | வெட்டு அருவாள் | 1 | 600 | 601 | 605 |
| 11 | விளக்கு மாறு | 1 | 50 | 51 | 55 |
| 12 | ஒடை மண்வெட்டி | 1 | 600 | 601 | 605 |
| 13 | மூங்கில் கூட்டுமாறு | 1 | 400 | 401 | 405 |
| 14 | அகப்பை | 1 | 300 | 301 | 305 |
| 15 | கைதகடு | 1 | 100 | 101 | 102 |
| 16 | கொக்கி முள்வாளி | 1 | 750 | 751 | 755 |
| 17 | சவல் | 1 | 900 | 901 | 905 |
| 18 | கிளவுஸ் | 1 | 275 | 276 | 277 |
| 19 | கம்பூட் | 1 | 850 | 851 | 855 |

அ.கு.:– குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி வினியோக உத்தரவு வழங்கவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 3164**

**குறைந்த விலைப்புள்ளிக்கு வகையாக உத்தரவு வழங்கலாம்.**

**<u>குழித்துறை நகர் மன்றத்தின் 31–07–2018–ம் செவ்வாய் கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்</u>**

<u>பொருள் எண். 1</u>

குழித்துறை நகராட்சி அலுவலகத்திலுள்ள Public Health Section-ல் Birth and Death Certificate எடுப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த இரு கணினிகளின் Mother Board, Fan, SMPS, Hard Disk ஆகியவை பழுதடைந்த காரணத்தினால் **16–04–2018** அன்று மேற்படி பழுதுகளை சரி செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1) JC Computers
2nd Floor Vincent plaza,
Kuzhithurai - Rs. 7300/-

2) Akshaya Computers
Sales and Service,
Kuzhithurai - Rs.7550/-

3) Agnes Computers Sales and
Service - Rs.7750/-

அ.கு. :அ) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் (1) JC Computers கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கிய JC Computers நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் அதற்கான பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3165**
**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகராட்சி ஆணையர் அறையிலுள்ள Printer பழுதடைந்துள்ளதால் HP Printer ஒன்று வாங்குவதற்கு **2–7–2018** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1) Newera Computers
Kuzhithurai - Rs. 10900/-

2) MJS Computers and Software
Solutions, Kuzhithurai - Rs.10700/-

3) JC Computers, 2nd Floor ,
Vincent plaza, Kuzhithurai - Rs.10500/-

அ.கு. :அ) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் (3) JC Computers கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கிய JC Computers நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கியமைக்கும் அதற்கான பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3166**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சி உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Bio- Mining முறையில் அப்புறப்படுத்தும் பணிகள் மேற்கொள்வதற்கு கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 19–06–2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் Topographic Survey எடுத்து மதிப்பீடு தயார் செய்து அறிவுறுத்தப்பட்டதன்படியும் ஆணையாளர் உத்தரவின்படியும் மேற்படி பணியினை செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1) M/s. Sri Sai recycle Solutions,
   125A, Veelakandan koil Street,
   Madurai - Rs.3750 Per acre

2) M/s. Land Point consultants,
   Coimbatore - Rs.4050 Per acre

அ.கு. :–அ) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் (1) M/s. Sri Sai recycle Solutions கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. Sri Sai recycle Solutions நிறுவனத்திற்கு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் அதற்கான பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்றத் தீர்மான எண். 3167**
**மன்றம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சி தேர்தல் வழக்கு எண். WP(MD) No.21496/2017 சம்மந்தமாக Counter Affidavit தயார் செய்த வகைக்கு நகராட்சி வழக்கறிஞர் திரு. வாமனன் என்பவருக்கு ரூ.10,000/– வழங்க வேண்டியுள்ளது. அதனை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3168**
**மன்றம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சி தேர்தல் வழக்காக WP(MD) No.21496/2017 சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சம்மந்தமாக நகராட்சி சார்பில் வாதிட அரசு வழக்கறிஞர் திரு.ஆர். கார்த்திகேயன் என்பவருகு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.9500/—க்கான செலவின தொகை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. :— மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3169**
**மன்றம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 6

மார்த்தாண்டம் காய்கறிச்சந்தையில் பட்டுபோய் விழும் நிலையில் நின்ற வேப்பமரத்தை பொது மக்களுக்கு ஆபத்து இல்லாமல் இருக்க வேண்டி, அப்புறப்படுத்தி நகராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள மரத்தை அப்புறப்படுத்த ஏலம் விட உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில், திரு.எ. ஆஸ்டின் என்பவர் குறைந்த தொகைக்கு (ரூ.2000/—க்கு) எடுக்க விலைப்புள்ளி தந்துள்ளார். எனவே அதனை ஏற்றுக் கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. :— மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3170**
**மன்றம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 7

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017—2018—ன்கீழ் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் முதல் சிறியகாட்டுவிளை செல்லும் சாலையில் அலங்கார ஓடுதளம் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 16—07—2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.டி. பிறேம்குமார் | 0.08% அதிகம் |
| 2 | திரு.டி. ஜஸ்டின்குமார் | 0.06% குறைவு |

அ.கு. :—அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2—ல் திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரால் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3171**
**மன்றம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சி துப்புரவுப் பணியாளர் திரு.T. சுரேந்திரனின் மகளின் திருமணச் செலவிற்கு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) முன்பணம் வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அ.கு. :– திருமணம் முன்பணம் ரூ.10,000/– (ரூபாய் மட்டும் ) வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3172**

**மன்றம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 93–வது வாவுபலி பொருட்காட்சியில் 6 முறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியும் உரிமம் பெறாத இனங்களுக்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.3163, நாள் 13–07–2018–ன்படி மனுதாரர் கோரும் விண்ணப்பத்தில் உயர்ந்த தொகைக்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கப்பட்டுள்ளதால் கீழ்கண்ட இனங்களில் உயர்ந்த தொகைக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு.

| வரிசை எண் | இனம் | 2017–2018 வருட குத்தகை தொகை ரூபாய் | 2018–2019 வருட குத்தகை தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | விளம்பரம் | 7,05,000 | 4,20,000 |
| 2 | உணவு விடுதி | 79,500 | 65,000 |
| 3 | உள் கடை எண்.2 | – | 25,000 |
| 4 | உள் கடை எண்.3 | 21,000 | 21,500 |
| 5 | உள் கடை எண்.7 | 33,760 | 32,500 |
| 6 | பொதுப்பணித்துறை கடை எண்.1 | 13,850 | 13,500 |
| 7 | பொதுப்பணித்துறை கடை எண்.2 | – | 14,000 |
| 8 | பொதுப்பணித்துறை கடை எண்.3 | 9,400 | 9,500 |
| 9 | பொதுப்பணித்துறை கடை எண்.4 | 9,270 | 9,400 |
| 10 | பொதுப்பணித்துறை கடை எண்.5 | 7,100 | 7,200 |
| 11 | பொதுப்பணித்துறை கடை எண்.6 | 5,200 | 5,700 |
| 12 | பொதுப்பணித்துறை கடை எண்.7 | 5,000 | 5,300 |
| 13 | பொதுப்பணித்துறை கடை எண்.8 | 6,000 | 6,100 |
| 14 | பொதுப்பணித்துறை கடை எண்.9 | 6,000 | 6,100 |
| 15 | தபால் நிலைய கடை எண்.2 | – | 20,000 |
| 16 | தபால் நிலைய கடை எண்.3 | – | 20,000 |
| 17 | வேலுத்தம்பி திடல் கடை எண்.3 | 6,150 | 6,200 |
| 18 | வேலுத்தம்பி திடல் கடை எண்.4 | 5,000 | 5,250 |

| | | | |
|---|---|---|---|
| 19 | வேலுத்தம்பி திடல் கடை எண்.13 | 5,200 | 5,250 |
| 20 | வேலுத்தம்பி திடல் கடை எண்.16 | – | 9,000 |
| 21 | வேலுத்தம்பி திடல் கடை எண்.17 | 9,200 | 9,000 |

**நகர்மன்றத் தீர்மான எண். 3173**

**உயர்ந்த தொகைக்கு உரிமம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.10

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி. முனிசாமி வணிகவளாக கடை எண். F2 மீது திரு. பாலன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு WP (MD) No.10658/2018–ன் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.(MD) No.11729/2018–ற்கு நகராட்சி ஆணையாளர் சார்பில் நகராட்சி வழக்கறிஞர் திரு.கே. வாமனன் தலைமையில் திரு.கே. செல்லபாண்டியன் அரசு வழக்கறிஞரால் ஆஜராகிய வகைக்கு வழக்கு கட்டணம் ரூ.50,000/–க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:– தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3174**

**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN75L.5874–ன் பின்பக்க டயர்கள் நான்கு தேய்ந்து விட்டபடியால் வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளது. இவ்வாகனத்திற்கு 7.50 x 16 நான்கு டயர்கள் புதிதாக வாங்குவதற்கு ரூ.37600/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி டயர்கள் M/S. கணேஷ் மோட்டார் நிறுவனம் மூலம் வாங்கிடவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:– அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று M/S. கணேஷ் மோட்டார் நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3175**

**மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ஆணையர்(பொ.) மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.